
Registered as a Newspaper in Ceylon ★ ★ ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (15-10-66) இதழ் 245
பராபவ புரட்டாதி 29 ஜு ஆகிர் 29 சனிக்கிழமை




### சுபந்திரியோ வழக்கு

#### தொகுப்புரை ஆரம்பம்

ஜாகர்த்தா, அக். 14

முன்னாள் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ மீது குற்றம் சாட்டி இங்குள்ள விசேஷ நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கில், பிரதிவாதியின் தொகுப்புரை ஆரம்பமாகியுள்ளது. அநேகமாக நாளை வாதிதரப்பில் தொகுப்புரை ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உலக வங்கி நிபுணர் பிரதமருடன் பேச்சு

## பொருளாதாரத் திட்டங்கள் பற்றி விரிவான கருத்துப்பரிமாறல்

கொழும்பு, வெள்ளி

இலங்கை வந்துள்ள உலக வங்கி பொருளாதார நிபுணர்கள் இன்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள்.

இலங்கை வந்துள்ள உலக வங்கி நிபுணர்களின் குழுவில் மூன்று நிபுணர்கள் அங்கம் வகிக்கின்றார்கள்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களுக்குப் பொருளாதார உதவிகளும், வேறு சாதன உதவிகளும் வழங்குவதுபற்றி இந்த நிபுணர்கள் பிரதமருடன் கலந்தாலோசித்துள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பல மந்திரிகளும், முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்கள் பலவற்றையும் ஆராய்வதுடன் பொருளாதார அபிவிருத்திகளுக்கு உலக வங்கியின் உதவி எந்த அடிப்படையில் தேவைப்படும் என்பதையும் ஆராய்வார்கள்.

கைத்தொழில் மந்திரியுடனும், திட்ட அதிகாரிகளுடனும் இவர்கள் பிரத்தியேகமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்று தெரிகின்றது.

## பஸ் இன்ஸ்பெக்டரை கண்டக்டர் தாக்கியதாகவழக்கு

### 17-ம் திகதி தீர்ப்பு வழங்கப்படும்

திருநெல்வேலி, வெள்ளி

இ. போ. ச. வைச் சேர்ந்த பஸ்கண்டக்டர் ஒருவர் பஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரைத் தாக்கியதாக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் தொடரப்பட்டிருந்தது. வழக்கில் தீர்ப்பு 17ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை சேவையில் கண்டக்டராகக் கடமையாற்றும் இளையதம்பி என்பவர் பிரயாணிகளுக்கு டிக்கட்கொடுக்காமல் இருந்ததைக் கோப்பாயில் வைத்துக் கண்டுபிடித்த பஸ் இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியம் யாழ்ப்பாணம் டிப்போ மனேஜரிடம் முறைப்பாடு செய்திருந்ததைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட கண்டக்டர் அந்த பஸ் இன்ஸ்பெக்டரைத்தாக்கியதாக யாழ்ப்பாணம் பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. வழக்கை பொலிஸ் தரப்பில் சார்ஜன்ட் ரி. அகிநேசரட்ணம் வழக்கை நடாத்தினர். எதிரி தரப்பில் புரக்டர் விசுவநாதன் ஆஜராகியிருந்தார்.

விசாரணை முடிவில் பஸ் கண்டர் இளையதம்பியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்டிரேட் தீர்ப்பை இம்மாதம் 17-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### சிங்கள ஆசிரியர் பற்றி பிரதமர்

கொழும்பு, வெள்ளி

இன்றைய ஒப்சேர்வர் பத்திரிகையில் வடக்குக்கு அதிக சிங்கள ஆசிரியர்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள ஒரு செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

கல்தோட்டை என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நேற்றுப் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா பேசும் போது வடக்குக்குச் சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளார்கள் மேலும் அதிக சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவார்கள் என்று கூறினர்.

இதை வேடிக்கைஎன்னவென்றால் வடக்குக்குத் தாமே போகமுடியாமல் இருப்பவர்கள் வடக்குக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது பற்றிப் பேசுகிறார்கள் என்று அவர் மேலும் கூறினர்.

பலாங்கொடை தொகுதிக்குப்போட்டியிடும் திரு அபுசாலியை ஆதரிப்பதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

## "தமிழரசார் எதிர்த்தால் நாங்களும் எதிர்ப்போம்"

### தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீமா

காலி, வெள்ளி

"வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்கள ஆசிரியர்களுக்கு இடமில்லையென்று தமிழரசுக்கட்சி கூறுமானல் தென்னிலங்கையில் தமிழாசிரியர்களுக்கு இடமில்லை என்பதை அவர்கள் உணரவேண்டுமென்ற அடிப்படையில் பெந்தர-எல்பிட்டிய இடைத்தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர்கள் தேர்தல் பிரசாரம் நடத்திவருகின்றனர்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், எதிர்க்கட்சித்தலைவர்களும் இங்கே பல தேர்தல் கூட்டங்களில் மேற்கண்ட கருத்தை வைத்துப் பேசியுள்ளார்கள். பிட்டிகல என்னுமிடத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு திரு. ஆர். ஜி. சேனநாயகா தலைமைவகித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கா பேசும்பொழுது குறிப்பிட்டதாவது: இனிமேல் நடக்கவிருக்கும் இடைத்தேர்தல்கள் பொதுத்தேர்தல்களிலும் பார்க்க மிகவும் முக்கியம்வாய்ந்ததாகும் ஏனெனில் இந்நாட்டைப் பிரித்துத் தமிழருக்கு ஒரு தனி அரசை நிறுவிக்கொள்வதற்கு இத்தேர்தல் ஒரு காரணமாகவிருக்கும்.

இம்மூன்று உபதேர்தல்களிலும் யு. என். பி. வெற்றிபெற்றால், தமிழரசுக்கட்சியினரும், தொண்ட

(5-ம்பக்கம் பார்க்க)

## பதவியிலிருந்து விலகுவதில் தாமதித்ததற்கு காரணம்

### தேர்தல் வழக்கு விசாரணையில் சிறிமா தந்த விளக்கம்

கொழும்பு, வெள்ளி

திருமதி பண்டாரநாயக்க இன்று அத்தனகல்ல தேர்தல் ஆட்சேபவழக்கில் சாட்சியமளித்தார். மனுதாரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே. சி. நடராசா குறுக்குவிசாரணை செய்தார்.

1965ம் ஆண்டு தேர்தலின்பின்தாம் பிரதமமந்திரி பதவியிலிருந்து விலகாமல் தாமதித்ததற்கு எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்

(8-ம்பக்கம் பார்க்க)

## ஆனையிறவு உப்பள அபிவிருத்தி

யாழ்ப்பாணம், சனி

**ஆனையிறவு, பாலாவி உப்பளங்களை விஸ்தரித்து அதிக அளவில் இங்கு உப்பு அறுவடை செய்ய கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதற்காக விரிவான திட்டமொன்றையும் அமைச்சு தயாரித்துள்ளது.

உப்பு விளைச்சலை அதிகரிப்பதன் முதல் நடவடிக்கையாக, உப்புச் சேகரிப்பை இயந்திரமயமாக்குவதென்றும் அமைச்சுத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது. இதுசம்பந்தமாக ஏற்கெனவே ஆனையிறவு, பாலாவி உப்பளங்களில் பிரெஞ்சு நிபுணர்கள் ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளனர். இந்த ஆராய்ச்சிகளின் பின்னர் வெளியான முடிவுகளைத் தொடர்ந்தே கைத்தொழில் அமைச்சு புதிய திட்டங்களைத் தயாரித்துள்ளது.

கைத்தொழில் அமைச்சின் திட்டங்களின்படி உப்பள விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு 25 லட்சம் ரூபாவும் இயந்திரங்களை வாங்குவதற்கு பத்துலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. விஸ்தரிப்புத் திட்டவேலைகள் ஏற்கெனவே ஆரம்பமாகியுள்ளன.

### 30 பசளைக் களஞ்சியங்கள்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 30 பசளைக் களஞ்சியங்களை அமைக்கக் கைத்தொழில் இலாகா முடிவு செய்திருக்கின்றது

அடுத்த ஆறு மாதங்களுக்குள் [illegible] அமைக்கப்படவிருக்கின்றன.

## 'இலக்கியத்தில் மறுமலர்ச்சி காணவேண்டும்'

உடுப்பிட்டி, வியா.

"இன்று ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பெரும் சோதனைக்காலம் ஏற்பட்டுள்ளது. வாசகர்களின் இலக்கிய நுணர்வின் தரம் இலக்கிய நூல்களின் தரத்தைவிடக் குறைவாகவுள்ளது. நமது இலக்கிய அரங்கிலே இது ஒரு சாபக்கேடாகும். வாசகர்களிடையே மட்டமான இரசிகத்தன்மை ஒரு குறைபாடாக உள்ளது. சிறந்த இலக்கிய சிருஷ்டிகளை படைப்பதன்மூலம் வாசகர்களின் தரத்தை உயர்த்த முடியும். இதனையே வெளிநாட்டு நூலாசிரியர்களும் பதிப்பாளர்களும் கையாண்டு வருகின்றனர்."

கரவெட்டி வாணி கலைக் கழகத்தில் நடைபெற்ற வடமராட்சி இளம் கலைச் சுவைஞர் சங்கக் கருத்தரங்கத்தில் பங்குபற்றிய குடிசன மதிப்புப் புள்ளி விபர இலாகா இணைப்புச் செயலாளர் திரு. வே. கமலநாதன் மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"கவிதைத் துறையில் யதார்த்த அம்சம் இல்லாதது ஒரு பெருங் குறையாகும். கவிஞர்களிடையே வேறுபாடில்லாத ஒருமித்த கருத்தும் ஒற்றுமையும் இருத்தல் அவசியம் கவிஞர்களின் கவிதைகளிலே மறுமலர்ச்சி பரந்துபட்டதாக இல்லாததனுல் அவர்களின் கவிதைகளில் கண்மூடித்தனமாகப் பழைய மர

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## சேவை

**தையல் மெஷின்:-**
தையல் மெஷின்கள் உங்கள் திருப்திக்கு திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப் பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம். அருணா ஏஜன்ஸீஸ், அளவெட்டி. 1289

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்று லேகம் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் மகிபூரணானந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. அருளானந்தம் முருகேசு சாமுவேல் ('இரத்தினவில்லா', நவாலி, மானிப்பாய்) நேற்று அதிகாலை (14—10—66) 2-30 மணிக்குகாலமாகிவிட்டார். அன்னாரது பிரேதசேம ஆராதனை அவர் இல்லத்தில் இன்று சனிக்கிழமை (15—10—66) காலை 8 மணிக்கு நடைபெறும். அன்னாரது பூதவுடல் நவாலி சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றாரும், உறவினரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும். எஸ். டி. நல்லதம்பி, 'இரத்தினவில்லா', நவாலி, மானிப்பாய். 1418

## தேவை

**சமையற்காரன்**
மேல்நாட்டுப்பிரயாணிகள் தங்கும் முதல்தரமான ஹோட்டலுக்கு, யாழ்ப்பாண முறைப்படி சோறு, கறி, பலகாரம் சமையல் செய்யக்கூடிய சமையல்காரன் தேவை. மாதாந்த சம்பளம் ரூபா 75/ அத்துடன் சாப்பாடு, இருப்பிடம், போனஸ் எல்லாம் கொடுக்கப்படும். நல்ல முன்னேற்றத்துக்கு இடமுண்டு. விளம்பர இல. 1419, ஈழநாடு லிமிட்டெட் மே/பா என எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 1419

**தொழிலாளர்**
அக்கராயன்குள வாய்க்கால் வேலை செய்ய கரும்புத்தோட்டத் தடியில் தொழிலாளர் தேவை. நிந்தவூர் முஸ்லிம்கள் தினம் (ஒருவர்) 12/-க்கு மேல் சம்பாதிக்கிறார்கள். விதலத்தில் விண்ணப்பிக்கவும். விவேகானந்தன், இளைப்பாறிய என்சினீர். 1416

**வேலைபழகுபவர்கள்**
வேலை பழகுவதற்கு 18 வயதிற்குட்பட்டவர்கள் தேவை. நேரில் வரவும். கொழும்பு கிருடியோ. இராசவி வீதி, யாழ்ப்பாணம். 1415

## விற்பனைக்கு

**'பப்பி'கள்**
இரண்டு மாத 4 பெண் 'பப்பி'கள் விற்பனைக்கு உண்டு. அல்சேஷன்-லெபுருடா கலப்பு இனம். 25, செம்மணி ரோட், நல்லூர். 1126

## குத்தகைக்கு

**தோட்டம்**
நாவற்குழியில் ரோட் ஓரத்தில் 50 ஏக்கர் அளவில் தென்னந்தோட்டமும் 10 ஏக்கர் அளவு நெல் வயலும், ஒருசின்னமனைகளாவும், ஒரு பெரிய மனைகளாவும், மந்தைத் தொழுவங்களும் கொண்ட 68 ஏக்கர் தோட்டம், 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருடத்திற்கு குத்தகைக்கு உண்டு. விபரங்களுக்கு விளம்பர இல: 1417, ஈழநாடு மே/பா, என்ற விலாசத்திற்கு எழுதி மூலம் விண்ணப்பிக்கவும். 1417

## தண்ணீரில் மூழ்கி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், சனி
கிணற்றுக்குள் விழுந்த மந்தை எடுக்கச்சென்ற சிறுவன் தண்ணீரில் மூழ்கிமரணமானான். இச்சம்பவம் மண்டதீவில் நடந்தது.

மண்டதீவு 7 ம் வட்டாரத்தை சேர்ந்த காசிநாதர் சின்னத்துரையின் 3 வயது மகனான ஜெயராசாவின் மரண விசாரணையின் போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. இராசையா சாட்சியை ஆஜர்செய்தார். மரணவிசாரணை அதிகாரி திரு ஆ. வல்லிபுரநாதன் விசாரணையின்பின் விபத்தினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்தார்.


# நவராத்திரி பூஜைக்கு

## தேவையான

- அபிஷேகத் திரவியங்கள்
- அபிஷேகச் சந்தனம்
- அபிஷேகக் குங்குமம்
- அபிஷேக விபூதி
- அபிஷேக வாசனைதிகள்
- கற்பூரம், சாம்பிராணி

ஊதுபத்திகள்

மற்றும்

சகல சாமான்களும் நிதானமான விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த 33 ஆண்டுகளாக நற்சேவை புரிந்து நற்பெயர் பெற்றவர்கள்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.

53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541
Residence: 7068

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு, கொழும்பு.


## வல்வைபட்டின சபைக்கூட்டம்

வல்வெட்டித்துறை, வெள்ளி
வல்வைபட்டினசபையின் விசேஷ கூட்டம் அதன் தலைவர் திரு. வி. இரத்தினவடிவேலு தலைமையில் நடைபெற்றபோது மீன்பிடி இலாகாவினால் நன்கொடையாகக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாடி ஒழுங்கை ஆதிகோவிலடி வீதி, கொத்தியால் அணைகட்டு ஆகியவற்றைத் திருத்தஞ் செய்வதென்றும் மீன், மரக்கறி சந்தைகளை கேள்விப்பத்திர மூலம் குத்தகைக்கு விடுவதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## நல உரிமைக் கழக கூட்டம்

யாழ்ப்பாணம், சனி
யாழ். கொட்டடி நல உரிமைக் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் டாக்டர் கே. பரராஜசிங்கம் தலைமையின் கீழ் நடைபெற்றது.

பின்வருவோர் புதியஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் கே. பரராஜசிங்கம். உபதலைவர்கள் திரு. வி. தெய்வேந்திரன், திரு. சி. நடராசா. இணைச் செயலாளர்கள் திரு. ந. சண்முகராசா, திரு. ஒ. ஆர். வேலுசுவாமி. பொருளாளர் திரு. ந. சுப்பிரமணியம். உப.பொருளாளர்கள் திரு. க. சாம்பசிவம், திரு. தி. பொன்னுத்துரை. கணக்குப்பரிசோதகர்கள் திரு. க. சிற்றம்பலம், திரு. எம். செல்லப்பா.

பத்துப்பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.




## கொழும்பு

**சனி 15-10-66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மடத்திலிருந்து.

இரவு 6-10 கிராமச் செய்திகள், 6-15 குரல்வகை, 6-45 பஜனை, 7-15 நேயர்கடிதங்கள், 7-30 நாடகம்—சாபம் பலித்தது—நாரந்தனை யூ ர் தா தன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு — கே. நடராசா, 10-00 மாதர் கேட்டவை.


REGAL—JAFFNA
NOW SHOWING
H. B. Warner
Dorothy Gumming
in


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கம விதானை தேவை

அக்கராயன்குளம் மத்திய வகுப்புத் திட்டத்தின்கீழ் தொகுதி 1 நெற்காணிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யவும், கடிதங்கள், இடாப்புகள், கணக்குகள் செய்யக்கூடிய கம விதானை தேவை. அவர். எஸ் எஸ். சி. மட்டில்படித்தவராயும் அனுபவமுள்ளவராயும், வயது 25க்கும் 40க்கும் இடையிலுள்ளவராயும் இருத்தல்வேண்டும். சம்பளம் ரூபா150/-க்குள் அவர் தகுதிக்குத்தக்கபடி கொடுக்கப்படும். மனுச்செய்ய விரும்புவோர் 26-10-66க்குள் காரியதரிசி, கமச்செய்கைக்குழு, அக்கராயன்குளம் தெற்கு, தொகுதி 1, அக்கராயன்குளம், கிளிநொச்சி என்றவிலாசத்திற்கு தராதரப்பத்திரங்களின் பிரதியுடன் விண்ணப்பிக்கவும்.

தி. சுந்தரத்தினம்,
காரியதரிசி
பயிர்ச்செய்கைக்குழு,
அக்கராயன்குளம்தொகுதி 1
அக்கராயன் குளம்,
கிளிநொச்சி.

1018

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
பொது வேலைத் திணைக்களம்
எண் 2590- (1) பளை 2) கிளிநொச்சி (3) பருத்தித்துறை ஆகிய இடங்களில் தொலைபேசி தன்னியக்க இணைப்புக் கட்டிடங்கள் கட்டுதல். கேள்விகள் முடிவு திகதி 9-11-66. இதன் முழு விபரங்களுக்கும் 14-10-66இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும். 217

## மனேச்சர் தேவை

அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்
அல்வாய்

S.S.C, அல்லது G.C.E. அல்லது கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும், வயது 21—40க்கும் உட்பட்டவராயும் காசுப் பிணை ரூபா 1000/-மும், உறுதிப்பிணை ரூபா 2000/-மும் செலுத்தக் கூடியவர் விண்ணப்பிக்கவும். மாதச்சம்பளம் ரூபா 100/- முடிவு திகதி 20-10-66.


வே. மகேசன்,
காரியதரிசி.
1329


**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
புளோரிடா-கிங்ஸலி நடித்த
வேறு சுவர்க்கம் எதற்கு
(சிங்களம்)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
பழநி

**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்

3வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு), பிளாசா (வெள்ளவத்தை), நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (தெமட்டகொட), விஜயா (மட்டக்களப்பு), ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ன் (பண்டாரவளை), வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொலி (நுவரெலியா), கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்

# அமெரிக்கா வருமாறு ரஷ்யத் தலைவர்களுக்கு ஜோன்ஸன் அழைப்பு

## பலநெருக்கடிகள் தீர வழி பிறக்குமென நம்பிக்கை

வாஷிங்டன், அக்டோபர் 14

வாஷிங்டனில் நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட அதிபர் ஜோன்ஸன், ரஷ்யத் தலைவர்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தார்.

ஆசிய நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் நடைபெற்ற இப் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில், அதிபர் ஜோன்ஸன் சர்வதேச பிரச்னைகள் குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார்.

அண்மையில் சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிக்கோவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி திரு. ஜோன்ஸன் குறிப்பிடுகையில், இப்பேச்சுக்கள் மிகவும் பலனுள்ளதாகவிருந்த



தென்றும் இப்பேச்சுக்களின் உபயோகம் விரைவில் தெரியவருமென்றும் கூறினார்.

''அமெரிக்காவும் சோவியத் யூனியனும் உலகின் மகப்பெரிய சக்திவாய்ந்த நாடுகள். இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது உலக சமாதானத்துக்கு பேருதவியாகவிருக்கும் ரஷ்யத் தலைவர்கள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தால் அவர்களை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்'' என்று அதிபர் திரு. ஜோன்ஸன் ஒரு கட்டத்தில் குறிப்பிட்டார்.

வியட்னும் நெருக்கடிகள் பற்றி அவர் தெரிவிக்கையில் போர் விரிவடைவதை அமெரிக்கா விரும்பவில்லை என்றும் அடுத்தவாரம் மணிலாவில் ஆரம்பமாகும் ஏழு நாடுகள் மகாநாடு பலனுள்ள முடிவுகளை வெளியிடும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.

---

லண்டன்

# சட்டப்பயிற்சி வகுப்புகளில் இலங்கை அதிகாரி

லண்டன், அக். 14

உதவி சட்ட தயாரிப்பாளரான திரு. வி. ஜோசப் கடந்தவாரம் லண்டன் போய்ச் சேர்ந்தார். லண்டனில் கடந்த 10-ம் திகதியிலிருந்து ஆரம்பமாகியுள்ள சட்ட பயிற்சி வகுப்புகளில் அவர் கலந்து கொள்வார். 16 நாடுகளைச் சேர்ந்த 20 சட்ட நிபுணர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிவருகிறார்கள்.

பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சு ஒழுங்கு செய்திருக்கும் இந்த பயிற்சி வகுப்புகள் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரை நடைபெறும். சர்வதேச சட்டம் சம்பந்தமான பல அம்சங்களிலும் வகுப்புகள் நடைபெறும்.

பிராந்திய தகராறுகள் ராணுவத் தளங்கள், விண்வெளி செயற்கை கிரகங்களை பாவிக்கும் முறைகள், ராஜரீக உறவுகள், நாடுகடத்தல், தேசிய பாதுகாப்பு முறைகள், சிவில் யுத்தங்கள், சட்ட தயாரிப்பு முறைகள் போன்ற விவகாரங்களில் பிரபல பிரிட்டிஷ் சட்ட நிபுணர்கள் சொற்பொழிவாற்றுவர்கள். இந்தியா, பாகிஸ்தான், ஹொங்கொங், கானு, காம்பியா, பிஜி, கிழக்கு ஆபிரிக்கா, நேபாளம் மால்டா, நைஜீரியா, பிலிப்பைன்ஸ், சியாராலியோன், தன்ஸானியா, உகண்டா, ஸாம்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்ட நிபுணர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றுகிறார்கள்.

---

# அணு ஆயுத பரிகரண மாநாடு

## சீனு அழைக்கப்படவேண்டுமென்று கோரிக்கை

நியுயோர்க், அக். 14

கம்யூனிஸ்ட சீனுவுக்கு ஐ. நா. சபையில் அங்கத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அதே வேளை நடைமுறை சாத்தியமான அணுவாயுத பரிகரண பேச்சுவார்த்தைகளில் சீனுவும் அழைக்கப்பட வேண்டுமெனவும் பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஜோர்ச் பிரவுன் ஐ. நா. பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கோரிக்கை ஒன்றை விடுத்தார்.

''அமெரிக்காவினதும் சோவியத் யூனியனதும் அணு சக்தி வல்லமையை எட்டிப் பிடிப்பதற்கு கம்யூனிஸ்ட் சீனு உறுதிபூண்டிருக்கிறது. இதன் காரணமாக அணு ஆயுத பரிகரணம் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் சீனுவும் அழைக்கப்பட்டாகவேண்டும்'' என்று திரு. பிரவுன் கேட்டுக் கொண்டார்.

விஞ்ஞான அறிவு வளர்ச்சியை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது. ஆனுல் அணுவாயுத தொடர்புடைய இயந்திர பிணைப்புகள் மேலும் சிக்கலடைந்து மனித ஆதிக்கத்தால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்படும் காலத்தை எம்மால் தரிசிக்கமுடியும்'' என்றுர் அவர்.

---

# 'சுபந்திரியோவுக்கு மரணதண்டனை வழங்குக'

## அரசாங்க தரப்பினர் கோரிக்கை

ஜாகர்த்தா, அக் 14

அரசாங்கத்தைக் கவிழ்க்க சதி முயற்சிகள் மேற்கொண்டதாக முன்னுள் வெளிநாட்டு மந்திரி டாக்டர். சுபந்திரியோ மீது குற்றஞ்சாட்டி தொடரப் பட்ட வழக்கு விசாரணைகள் இப்பொழுது முடியும் தருவாயில் இருக்கின்றன.

இவ்விசாரணைகள் இங்குள்ள விசேஷ இராணுவ நீதிமன்றமொன்றில் நடைபெற்று வருகின்றன.

நேற்று அரசாங்கத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், டாக்டர் சுபந்திரியோவுக்கு மரண தண்டனை வழங்கவேண்டுமென்று கோரினர்.

தம்மீது சுமத்தப் பட்டுள்ள எல்லாக் குற்றச்சாட்டுகளையும் டாக்டர் சுபந்திரியோ மறுத்துள்ளார்.

---

### 13 பேர் கைது

பம்பாய், அக். 14

மேற்கு ரயில்வே மாஹிம்வீதி ரயில் நிலையத்துக்கருகே மின்சார ரயிலின் முதல் வகுப்பு வண்டி தீயிட்டுக் கொளுத்தப்பட்டதைத் தொடர்ந்து 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்'

---

### ராஜினமா

ஸ்ரீநகர், அக். 14

காஷ்மீர் கலாசார மந்திரி திரு. திரிலோசன் ... தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

---

### உண்ணுவிரதம்

கல்கத்தா, அக். 14

ஜாதவ்பூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 90 மாணவர்கள் 48 மணிநேர உண்ணுவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

---

### 60 பேர் வாந்தி

சென்னை, அக். 14

பூந்தமல்லி இறில்தலை ஸ்தாபனமொன்றைச் சேர்ந்த 130 மாணவர்கள் காலை உணவு முடித்ததைத் தொடர்ந்து வாந்தி எடுத்ததனுல் 60 மாணவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

---

### அயூப்கான்

ராவல்பிண்டி, அக். 14

பாகிஸ்தான் அதிபர் [illegible] இன்று டெஹ்ரானுக்கு விஜயம் செய்கிறார்.

---

ரொடீஷிய விவகாரம்

# பிரிட்டனின் புதிய யோசனைகள்

## சிரேஷ்ட அதிகாரி ஸாலிஸ்பரி விஜயம்

ஸாலிஸ்பரி, அக். 14

ரொடீஸியப் பிரச்னையை முடிவுக்குக் கொண்டுவரும் பிரிட்டனின் (கடைசியான) சில யோசனைகளுடன் பிரிட்டிஷ் அரசாங்க சிரேஷ்ட அதிகாரியொருவர் ஸாலிஸ்பரிக்கு விஜயஞ்செய்துள்ளார்.

ரொடீஷிய பிரச்னைசம்பந்தமாக பிரிட்டிஷ் மந்திரி சபை செய்த முடிவுகளைத் தொடர்ந்து இந்த அதிகாரி ஸாலிஸ்பரிக்கு அனுப்பப் பட்டுள்ளார் என்று பிரிட்டிஷ் காமன்வெல்த் காரியதரிசி நேற்று லண்டனில் தெரிவித்தார்.

ரொடீஷியாசம்பந்தமான பிரிட்டனின் புதிய யோசனைகள் திரு. அயன் ஸ்மித்தை அதிகம் பாதிக்கமாட்டாதென்றும் இந்த யோசனைகளைத் திரு. அயன் ஸ்மித் ஏற்றுக்கொள்வதன் மூலம் ரொடீஷிய விவகாரம் சுமுகமாகத்தீர வழிபிறக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

ரொடீஷிய பிரச்னை அடுத்தவாரத்துக்கு முன்னர் தீர்க்கப்படவேண்டுமென்றும் அவர் கூறினுர்.

பிரிட்டனின் புதிய யோசனைகளின் விபரம் கடைசியாக வெளியிடப்படவில்லை.

---

# "உச்சிமகாநாடல்ல; கருத்துப் பரிமாறல் மட்டுமே"

## புதுடில்லி சந்திப்பு குறித்து இந்திரா

டார்ஜிலிங், அக். 14

இந்திய-சீனத் தகராறில் எந்தவிதமான மத்தியஸ்த யோசனைக்கும் சீனு இணங்காது என்றும் இதற்கு உள்நாட்டில் ஏற்பட்டுள்ளநிலைமைகளே காரணம் என்றும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்றுஇங்கு நிருபர்களுக்குஅளித்தபேட்டியில் தெரிவித்துள்ளார்.

பூட்டானில் சீன ஊடுருவல்கள்பற்றி நிருபர்கள் கேட்ட கேள்விக்குப் பிரதமர் இந்திரா பதிலளிக்கையில், பூட்டானின் தென் கிழக்கே சீனர்கள் விலகிச் சென்றுவிட்டார்களா இல்லையா என்பதுகுறித்து தமக்குத் தெரியவில்லை என்று கூறினுர்.

அடுத்தவாரம் புதுடில்லியில் நடைபெறும் முத்தரப்பு சந்திப்புக் குறித்து அவர் தெரிவிக்கையில், நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாடு என்று அதனைக் கருதக்கூடாதென்றும் மூன்றுநாட்டுத் தலைவர்களும் பல்வேறு விஷயங்கள் குறித்து நேரடியாக கருத்துப்பரிமாறல்கள் செய்யவே இச்சந்திப்பு நிகழுகிறதென்றும் கூறினுர்.

---

# இலங்கைப் பாராளுமன்றக் குழு கௌரவிக்கப்பட்டது

வாஷிங்டன், அக். 14

இலங்கை பாராளுமன்ற குழுவினரும், அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதர் திரு. ஒலிவர் வீரசிங்காவும் அமெரிக்க செனெட் சபையினுல் இவ் வாரம் கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை பாராளுமன்ற குழுவில் அங்கம் வகிக்கும் செனெட்டர் ஒபயசேகரா, பாராளுமன்ற விகிதர் திரு. எஸ். எஸ். விஜயசிங்கா, திருமதி. சிவாஒபயசேகரா, டாக்டர் என்.எம். பெரேரா ஆகியோர், வெளிநாட்டு உறவுக் கமிட்டி அங்கத்தினரால் அளிக்கப்பட்ட நண்பகல் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டனர். பின்னர் அமெரிக்கசெனெட் சபைக்கும் விஜயம் செய்தனர்

செனெட் சபையின் பெரும்பான்மைக் கட்சித்தலைவர் செனெட்டர் மைக்மான்ஸ்பீல்ட் விருந்தினரை வரவேற்கையில், தனது இலங்கை விஜயத்தை நினைவுகூர்ந்தார். இலங்கை அரசாங்க அதிகாரிகள் மக்களுக்கு நல்வாழ்வு வழங்க மேற்கொள்ளும் முயற்சிகள் தம்மை மெச்சும் கவர்ந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற குழுவை, செனெட்டர் பிராங் ஜே. லோஷ்ச்செனெட்சபைக்கு அறிமுகப்படுத்தி வைக்க, செனெட்டர் ஜோர்ஜ் டீ. ஏக்கன் விருந்தினர்களை வரவேற்றுர்.

---

### ஸாகீர் ஹுஸைன்

சிங்கப்பூர், அக். 14

இந்திய உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகீர் ஹுஸைன் இன்று சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். இங்கு நான்கு தினங்கள் தங்கிய பின்னர் அவர் மலேசியாவுக்கு விஜயம் செய்வார்.

---

### புங்குடுதீவில் சிரமதானம்

புங்குடுதீவு, செவ்வி

புங்குடுதீவு 4-ம் வட்டாரத்திலுள்ள காளிகோவில் வீதி, பாடசாலை வீதி, கோரக்குண்டு வீதி, ஆகிய மூன்று வீதிகளையும் சிரமதானத்தின் மூலம் பொதுஜனப் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் திருத்திமைப்பதற்கு அல்லைப்பிட்டார கிராமசபை உறுப்பினர் திரு. க. திருநாவுக்கரசுவும், புங்குடுதீவு மேற்கு கிராமசேவையாளர் திரு. வி. பொன்னம்பலமும் எடுத்த முயற்சியால் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. மக்றிசி சிரமதானப் பணிக்கு அரசினர் அளிக்கும் மா, பால், போன்ற உணவு வகைகளை சிரமதானத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

எல்லா உயிர்களிடத்திலும் வீற்றிருக்கும் பரம்பொருள் ஒன்றே. அது பொதுவாக எல்லாரிடத்திலும் வீற்றிருக்கிறது. ஒரே பரம்பொருளைத் தாங்கியுள்ள உயிர்களுக்குள் பிறப்பில் உயர்வோ தாழ்வோ தீண்டாமையோ கற்பிப்பது அஞ்ஞானம்.

—திரு. வி. க.

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Postlines ......

Telegrams: EELANADU Jaffna; Telephone: ......

...ஏழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 29 (15-10 66

# தேர்தல் பிரசார நெறிமுறை

மூன்றுதொகுதிகளின் உபதேர்தல் வாக்களிப்புத் தினம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேர்தல் நெருங்க நெருங்கப் பிரசாரமும் சூடுபிடித்துக்கொண்டு வருகிறது. தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு, பொருளாதாரம் ஆகிய முக்கிய பிரச்னைகள் பின்னே சென்று சந்தர்ப்ப வாதமும் வகுப்பு வாதமும் முன்னணிக்கு வருகிறது. கடந்த காலச் சம்பவங்களினால் பெற்ற அனுபவத்தை மறந்து மீண்டும் பழைய வகுப்புவாதத்தை தேர்தல் பிரச்னையாக்க நம்நாட்டு அரசியல் தலைவர்கள் முன்வந்திருப்பது வேதனையளிப்பதாகும்.

தனித்தமிழ் ராஜ்யம் கோரும் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் நடைபெறும் போராட்டக்களம் தான் பெந்தர எல்பிட்டிய உபதேர்தல் என்று தம்பதெனியாப் பிரதிநிதியும் பௌத்தத்தைப் பாதுகாப்பதே தங்கள் இலட்சியம் என்று திரு. மைத்திரிபாலசேன நாயகாவும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறியிருக்கின்றனர். தனித்தமிழ் ராஜ்யம் ஒன்றைத் தமிழர்களுக்கென அமைத்துக் கொள்வதற்கு தேசிய அரசாங்கம் என்றழைக்கப்படும் இந்த அரசாங்கத்துக்கும் சமஷ்டிக் கட்சிக்கும் கட்டளை வழங்குவது இந்த மூன்று உபதேர்தல்களின் முடிவைப்பொறுத்திருக்கிறதென்று எதிர்க்கட்சித்தலைவர் திருமதி பண்டாரநாயகாவும் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

"காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" என்பதுபோல எதைக்கண்டாலும் தனித்தமிழ் ராஜ்யமாகவும் தமிழ்மொழியாகவும் இந்தியராகவும் தோற்றமளிப்பது ஆர். ஜி சேனநாயகாபோன்ற 'கொள்கை வங்குரோத்தான' அரசியல் வாதிகளுக்குப் புதிதல்ல. தேர்தல் பிரசாரத்தில் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு வாக்குப்பெறுவதற்கு இவர்களுக்குரிய ஒரேயொரு ஆயுதமும் இந்தப் பிரசாரம் தான். ஆனால் இதை வெறும் தேர்தல் பிரசாரம் என்று கவனக்குறைவாக விடுவது நாடு மேலும் பின்னடைவதற்கே வழிவகுக்கும். ஆர். ஜி. போன்றவர்கள் ஒருபுறமிருக்க இந்நாட்டின் பிரதம மந்திரியாகப் பதவி வகித்தவரும் இன்றைய எதிர்க்கட்சித் தலைவராகப்பதவி வகிப்பவருமான பொறுப்புவாய்ந்த ஒரு தலைவர், இந்நாட்டின் தாயாக ஒரு சமயம் ஐ. நா. மகாசபையில் அறைகூவல் விடுத்த திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா, கடந்தகால அரசியல் அனுபவங்களிலிருந்து நன்கு பாடம் படித்திருந்தும் மீண்டும் 'நாட்டைப் பிரிப்பது' பற்றி பிரசாரக் கூட்டங்களில் பேசியிருப்பது வேடிக்கையானது மட்டுமல்ல வேதனையளிப்பதுமாகும்.

ஆளும் கட்சியினரானாலும் சரி, எதிர்க் கட்சியினரானாலும் சரி, இன்றைய முற்போக்கான காலத்தில் இன்னும் பழைய பத்தாம் பசலி முறையில் தேர்தல் பிரசாரத்தில் இனம், வகுப்பு, மதம், மொழி ஆகியவைகளைப் பயன்படுத்துவது அவர்களுக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல. தேர்தல் வரும், போகும். ஆட்சி பீடத்தில் இன்று ஒரு கட்சி அமர்ந்திருக்கும் நாளை ஒரு கட்சி இடம் பிடிக்கும். ஆனால் நாடும் அதன் மக்களும் நிரந்தரமானது. இன்றைய தேர்தல் பிரசாரம் நாளைய சமுதாயத்தில் பிளவையும் பிரிவினையையும் துவேஷத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கக் கூடாது.

எனவே உப தேர்தல்களுக்கான பிரசாரமானாலும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரமானாலும் சரி வகுப்பு, இன, மத, மொழிப் பிரச்னைகளையும் தனிப் பட்டவர்களைப் பற்றிய விஷயங்களையும் தேர்தல் பிரசனைகளாக்காமல், நாட்டின் பொருளாதாரப் பிரச்னை, வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னை ஆகியவைகளை மட்டும் கொண்ட கொள்கை அடிப்படையிலான முறையில் தேர்தல் பிரசாரத்துக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் முன்னதாகவே தேர்தல் பிரசார நெறிமுறைக் கோட்பாடு ஒன்றை வகுத்துக் கொள்வது நல்லது இதனால் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் யார் தோல்வி அடைந்தாலும் மக்கள் மனதில் துவேஷம் ஏற்படாததுடன் தேசிய ஐக்கியமும் தேசிய ஒருமைப்பாடும்சீர்குலையாது. தேர்தல் பிரசாரமும் நாட்டின் அரசியலும் உயர்ந்த தரத்தில் நாகரிகத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக விளங்கும். தேர்தல் பிரசார நெறிமுறைக் கோட்பாட்டை வகுப்பதில் இடதுசாரி அரசியல் கட்சிகள் அதிக பங்கு கொள்ள நியாயமுண்டு.

## பிள்ளையார் கோவில் மண்டலாபிஷேகம்

காரைநகர், சனி

காரைநகர் தங்கோடை புலியங்குளம் பிள்ளையார் கோவில் மண்டலாபிஷேகம் நாளைமாலை நடைபெறவிருக்கிறது. காலை அருளானந்தப் பிள்ளையார் பெருமானுக்கு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும், பரிவாரமூர்த்திகட்கு ஸ்நபனாபிஷேகமும் விசேஷ பூசையும் நியாசார்ச்சனையும் மாலைவிசேஷ தீபாராதனை பூசையும் திருவூர்தலும் நடைபெறும். ...... புஷ்ப பல்லக்கில் ...... வலம்வருவார்.

# மங்களம் பொங்கும் விழாக்கள்

— ச. அம்பிகைபாகன் பி. ஏ., —

(நேற்றைய தொடர்ச்சி)

அன்னைக்கூடன் பிறப்பான என் மாமனே
அறையுமொழி ஒன்று கேளீர்
அன்புடன் தன்மருகனென்று நலணிபுனைந்
தாதரவு காட்டி வருவீர்
மன்னர்க் கிணைந்த கொடை வள்ளல் இவராமென்று
மாநிலம் புகழ வேண்டும்
வரந்தருங் கடவுளும் திருவுளமகிழ்ந்தருள் செய்
வளமெலாம் பெருகவேண்டும்
என்னைப் படிப்பித்து நல்லறிவொழுக்கமுடன்
எங்கும் நிறைதெய்வபதி
யானையும் வளர்த்து வரும் ஆசிரியர் உம்முடைய
இல்லத் திசைந்து வந்தார்.
பொன்னைச் சிறந்த கனிவகை வட்டுவதிரம்
பூவிப்புடன் தட்சனை
புண்ணியக் குழுவுக் களித்து முகமலர்வுடன்
பொலிவுபெற வாழுவீரே.

ஈற்றில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து மங்களமும் வாழியும் பாடி முடித்தனர். பின்வரும் பாடல்களிற் காண்க.

**மங்களம்**

திங்களொடு கங்கையணி பரமற்கு முமையம்மை
தேனிக்குமே மங்களம்
திகழுமணி மாதங்க முகவள்ளலுக்குமே மங்களம்
ஜெய மங்களம்
துங்கமிகு வள்ளி தெய்வானைக்கும் ஆறுமுக சுவாமிக்குமே மங்களம்
சொல்லரிய புவிமாது மலர்மாது சேருமதி தூதர்க்குமே மங்களம்
மங்கையாசவலுறையும் நாகேஸ்வரிக்கும் நான்முகனுக்குமே மங்களம்
பன்னரிய வேதாகம புராணங்கள் பலகலைகள்
நிறைதரு மங்களம்
மங்களமோடே மனிதர் குடிகோத்திரம் பெருகி
வாழவே ஜெயமங்களம்
மாமுகில்கள் மழை பொழிய மங்களா தேனிக்கும்
மங்களம் மங்களமிதே

**வாழி**

மங்களம் நிறைந்து செல்வம் பெருகியே நிதமும்
வாழி நீடூழி வாழி
மனைமக்களொடு சுற்ற மிகவுற்று மங்களம் மலிந்து
நீடூழி வாழி
திங்கள் மும்மாரி பொழியப் புவிகளெங்கும் சிறந்து
நீடூழி வாழி
திருமருவு மரசருஞ் செங்கோலுநீதியுஞ் செந்தமிழும்
வாழி வாழி
அங்கமோராறு நால்வேதமுடன் அந்தணரும்
ஆனினமும் வாழி வாழி
அரனாலயங்கள் முதலான தேவாலயங்களும்
அழகுடன் வாழி வாழி
எங்குமே சிவசமயம் உண்டாகவே நிதமும் ஏற்றமாய்
வாழி வாழி
ஈசர் நடேசர் பரமேசர் அருள்பெற்று என்று மிக
வாழி தானே

[இப்பாடல்களை தந்துதவிய கொக்குவில் த. குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்கும், வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் அவர்களுக்கும், பண்டிதர். செ. நடராசா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் ச, அ.]

(முற்றும்)

# பாரதிகண்டபராசக்தி

— இ. நாகராஜன் —

(நேற்றைய தொடர்ச்சி)

இயற்கையென் றுனையுரைப்
பார்—சிலர்
இணங்கும் ஐம்பூதங்கள்
என்றிசைப்பார்
செயற்கையின் சக்தியென்
பார்—உயிர்
தீயென்பார் அறிவென்பார்
ஈசனென்பார்.
வியப்புறு தாய்நினக்கே
—இங்கு
வேள்விசெய் திடுமெங்கள்
'ஓம்' என்னும்
நயப்படு மதுவுண்டே? - சிவ
நாட்டியங் காட்டிநல்
லருள் புரிவாய்

இந்தப் பாடலில் இயற்கையை இணைக்கின்றான் பாரதி. சந்தமும், கருத்தும் குலவும் கவிதையின் பொலிவே தூர்க்கையின் உருவமாக அமைகிறது. அடுத்து

'செல்வ மெட்டு மெய்தி
—நின்னால்
செம்மை யேறி வாழ்வேன்
இல்லை யென்ற கொடுமை
—உலகில்
இல்லையாக வைப்பேன்,
முல்லைபோன்ற முறுவல்
—காட்டி
மோக வாதை நீக்கி
எல்லை யற்ற சுவையே
—எனை நீ
......

...... பாரதியை ஒரு பாட்டுக் கவிஞரென்றும், புதுமையையே பாடியவரென்றும் நாம் போற்றிய போதிலும், அவனது அருள்நம்பிக்கையே புரட்சியையும் புதுமையையும் கொடுத்ததென்பதைக் காண்கின்றோம்.

நின்னாற் செம்மையேறி
வாழ்வேன் இல்லையென்ற
கொடுமை—உலகில்
இல்லையாக வைப்பேன்

இக்கவிதையின் மூலம் திருமகளிடம் அருள் பெற்றால் இல்லையென்ற கொடுமையை இல்லையாக்க முடியுமென்கின்றார்.

தெளிந்து பரந்திடக்கும் ஏரியின் நடுவில் வெண்மைக் கேவெண்மைகொடுத்து தூய்மைதுலங்க ஒளிருகின்றது வெண்தாமரைப்பூவொன்று உற்றுக்கவனிக்கிறான் பாரதியன்மிகு அற்புத அழகின் அன்னை வாணியையே தரிசனம்செய்கிறான். நெஞ்சிலிருந்துகவிதை மலருகிறது.

"வெள்ளைத் தாமரைப்
பூவிலிருப்பாள்
வீணைசெய்யும்
ஒலியிலிருப்பாள்
கொள்ளை இன்பம்
குலவு கவிதை
கூறு பாவலர்
உள்ளத்திருப்பாள்
உள்ள தாம்பொருள்
தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின்
உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற
முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்
துட்பொருள் ஆவாள்"

இயற்கையில் மலர்ந்த வெள்ளை மலரைக் கண்டு வாணியைப் போற்றப் புகுந்தவன், எண்ண மடைதிறக்கிறது. அப்பால் அந்த வாணி வதிகின்றஇடங்களையெல்லாம் விபரித்துச்செல்கின்றான்.

பாரதி நோக்குமிடமெங்கும் சக்தியைக் காண்கின்றான். அவன் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் சக்தியைக்காணவில்லை. தாய்நாட்டைச் சக்தியாகவே காணுகின்றான். தாய்மொழியைச்சக்தியாகவேகாண்கின்றான். உயிர் இயக்கமுழுமையும் அவள் மேவிநிற்பதை உய்த்துணர்கின்றான். அந்த மாபெரும் சக்தியே அவன் இத்தகைய மாபெரும்கவிஞனாக அருள்வழங்கினாள் என்றால் அது மிகைப்பட்ட கருத்தாகாது.

(முற்றும்)

## நாட்டிலும் நகரிலும்

வேண்டாத விருந்தினரொருவரை வெளியேற்றுவதில் பலர் பலவிதமான உத்திகளைக் கையாளுகிறார்கள். அடிக்கடி கைக்கடியாரத்தைப் பார்ப்பது, கொட்டாவி விடுவது, பேசிக் கொண்டிருப்பவரை பார்க்காமல் வேறெங்காவது, பார்த்துக்கொண்டிருந்து அவர் சொல்வதற்கெல்லாம் 'உம்' கொட்டிக்கொண்டிருப்பது, வேறு யாரையோ எதிர்பார்ப்பதுபோல அடிக்கடி வெளியே எட்டிப்பார்த்தால் —இவையெல்லாம் 'தயவுசெய்து இனிப் போய் விடுங்கள்' என்று கூறுமல் கூறும் சமிக்ஞைகள்.

இவை சிறிது பண்பாடுள்ளவர்கள் நாசூக்காகச் செய்துகாட்டும் முறைகள் என்று சொல்லலாம். நம்மூர் கிராமங்களில் இவ்விதமான மிருதுவான பழக்க வழக்கங்களை எதிர்பார்க்க முடியாது. எனது பாட்டி இருக்கிறார் உதாரணத்துக்கு யாராவது ஒருவர் இரவில் எங்கள் வீட்டுக்கு வந்து மணித்தியாலக் கணக்காகத் 'தொண தொண'வென்று பேசிக் கொண்டிருந்தால், 'வீட்டிலை கோச்சி தேடமாட்டாவே, தம்பி' என்று முகத்தில்அறைந்தாற்போல கேட்டுவிடுவாள் பாட்டி. சிலசமயம், 'சோற்றுப் பானைக்குள்ளே தண்ணீர் வாத்தப்போயினம்' அல்லது 'கடைசி வசவும் போட்டுது' என்றும் சொல்லிப் பார்ப்பாள்.

மேனாட்டவர்கள் இவ்விதமாக நடந்துகொள்வதில் எம்மைவிட எவ்வளவோ தூரம் முன்னேறியுள்ளார்கள் என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம்; ஐரோப்பியரிலும் பிரெஞ்சுக்காரர்கள் இந்த விஷயத்தில் மிகவும் சமர்த்தர்கள்.

வடவியட்னாம் தலைவராகிய ஜனாதிபதி ஹோசிமின் 1946ம் வருடம் இந்து சீன சுதந்திரத்தைப்பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு பாரிஸ்நகரம் போயிருந்தார். ராஜாக்கள், ராஜாதந்திரிகள், அரசியற்தலைவர்கள் முதலானோர்க்கு சிவந்த கம்பளம்விரித்து கௌரவிப்பது சம்பிரதாயம். ஹோசிமின் பாரிஸுக்கு விஜயம் செய்த முதலாம் நாள் அவருக்கு தெரு வீதியிலிருந்து அவர்தங்கியிருந்த இரண்டாம் மாடிவரை சிவந்த கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அரசியல் பேச்சுவார்த்தைகள்தொடங்கின. நாளுக்கு நாள் பேச்சுகள் தோல்வியடையஆரம்பித்தன. சிவந்த கம்பளத்தின் நீளமும் அதற்

( 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 பிள்ளைகளின் தந்தை கிணற்றுள் விழுந்து மரணம்

மாவிட்டபுரம், சனி

நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையான ஒருவர் நீராடுகையில் கிணற்றுள் விழுந்து மரணமான பரிதாப சம்பவம் ஒன்று மல்லாகத்தைச் சேர்ந்த கல்லாரையில் நடைபெற்றுள்ளது.

நாற்பது வயதுடைய பசுபதி துரைராசா என்பவரின் மரணம் சம்பந்தமாக உடுவில்—மல்லாகம் கோவிற்பற்று திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. எஸ். தாமோதரம்பிள்ளை மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவரின் மனைவி பவளம் சாட்சியமளிக்கையில் காலஞ்சென்றவர் சம்பவத்திற்கு 17 நாட்களுக்கு முன் வவனிக்குளத்திற்கு நெல் விதைக்கச் சென்றதாகவும், சம்பவதினம் திரும்பிவந்ததாகவும் தன்னிடம் செலவுக்கு 22 ரூபாய் தந்ததாகவும் அவர் தான் முழுகப் போவதாகக் கூறவே அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து அவருக்கு முழுகவார்த்ததாகவும், இரண்டுவாளி தண்ணீர் வார்த்ததும் அவர் தான் முழுகப்போவதாய்க் கூறி வாளியை வாங்கி அள்ளியவர் கால் சறுக்கி கிணற்றுக்குள் விழுந்துவிட்டதாகவும், அவர் முழுதும்பொழுது அதிக குடிபோதையில் இருந்ததாகவும், தான் குளறிய சத்தத்திற்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தரும் மற்றும் பலரும் ஓடிவந்ததாகவும், மாரிக்கண்டு இராசதுரை என்பவர் கிணற்றில் இறங்கி அவரைத் தூக்கியதாகவும், அவருக்கு பொலிஸ் உத்தியோகஸ்தர் முதலுதவி அளிக்க முன்வந்தபோதிலும் தாம் அவரை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு காரில் அனுப்பியதாகவும் அவர் மரணமடைந்துவிட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

காங்கேசன்துறை பதில் வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரம் பிரேத பரிசோதனை செய்தார்.

மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பின்போது காலஞ்சென்றவர் அதிக குடிபோதையில் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியமையால் மரணம் சம்பவித்ததாக தீர்ப்பளித்தார்.

# 'பாடசாலையின் உடனடித் தேவையை பெற்றோரே கவனிக்க வேண்டும்"

—எம்.பி.

சங்கானை, வியாழன்

''தேசிய அரசாங்கத்தில் நாம் அங்கம் வகித்தாலும், நமது தேவைகள் அனைத்தையும் பெற்றுவிடக் கூடிய நிலையில் இல்லை. இலவசக்கல்வி வாதக் கல்வி அதிகாரிகளின் நடத்தையால் தமிழ்ப் பகுதிக்கு விஞ்ஞான கூடம் முதலிய வசதிகளை எளிதில் பெற முடியாத இக்கட்டான நிலை ஏற்படுகின்றது. பெற்றோர் தம் சொந்தமுயற்சியால் அவசரத்தேவைகளை நிறைவேற்றிவைக்க வேண்டுமே தவிர அரசினரை எதற்கும் நம்பிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தண்ணீர்இல்லாது மாணவர் படும் அவதியை அறிகிறேன் புதிய அதிபரின் தலைமையில் இந்த வித்தியாலயம் பல்வேறு துறைகளிலும் முன்னேறும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு.

கிளிநொச்சி எம். பி, திரு. கா. பொ. இரத்தினம் பூநகரி மகாவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தலைமைவகித்த அதிபர் மு. சிவானந்தம் பேசும் போது குறிப்பிட்டதாவது: குடி நீர்ப் பிரச்னை, விஞ்ஞானகூடம், விளையாட்டு மைதானம், சலகூடம் முதலிய உடனடித்தேவைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டும். பெற்றோர்பூரணமாக ஒத்துழைத்து கல்லூரி வளர்ச்சிக்காக பாடுபட வேண்டும்.

குளாய்மூலம் நீர்விநியோகித்தல், சலகூடம் அமைத்தல், விஞ்ஞான ஆசிரியரை நியமித்தல் முதலியனவற்றை வலியுறுத்தும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

# தமிழ்ப்பத்திரம் இல்லை

பலாலி, சனி

மயிலிட்டி உப தபாற்கந்தோரில் அடையாள அட்டை விண்ணப்பப்பத்திரம் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மட்டும்தான் இருக்கிறது. தமிழ்ப்பத்திரம் வழங்கப்படவில்லை.

இதனால் பல ஜீ. சி. ஈ மாணவர்கள் தங்களுக்கு தமிழ் விண்ணப்பத்திரம் கொடுக்கப்படாவிடில் விண்ணப்பப்பத்திரம் வேண்டாமென்று திரும்புவதாகத் தெரிகிறது. வேறு சிலர் மேலிடத்திற்குப்புகார் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

புலோலி

# கொலைமுயற்சி வழக்கு விசாரணை

வல்வெட்டித்துறை, வியா.

புலோலி தெற்கு குரும்பசிட்டியைச் சேர்ந்த பரஞ்சோதி துரைராசா என்பவரை அதே ஊரைச்சேர்ந்த ஆழ்வான் சுப்பன் என்பவர் சென்ற ஆனி மாதம் 24-ந் திகதி துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்தாக பருத்தித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. ரூபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆறுமுகம் அம்பலவி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் தலைமை ஆசிரியராக நாகர்கோவிலில் படிப்பிக்கிறேன். சம்பவம் நடந்த தினத்தன்று பிற்பகல் 12-30 மணியளவில் வீட்டிலிருந்து பத்திரிகை படித்துக் கொண்டு இருந்தேன். அந்நேரத்தில் வாங்க சாலைப்பக்கமாக நான்கு துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்ட சிறிது நேரத்தின் பின் குளறிச் சத்தம் கேட்டது. அப்போது எனது வீட்டு வாசலில் வந்து செல்லையா என்பவர் 'மாஸ்டர் மாஸ்டர்' என்று கூப்பிட்டார். வாசலில் போய் பார்த்தபோது செல்லையா துரைராசாவை தாங்கிய படி கூட்டிக் கொண்டு வந்திருந்தார். என்ன நடந்ததென்று கேட்டபோது 'ஆழ்வான் சுப்பன் சுட்டுப் போட்டான்' என்று சொன்னார். அந்நேரத்தில் துரைராசாவின் முன்பக்க நெஞ்சு முழுவதும் காயங்களுடன் இருந்தன. மயக்கம் தெளிவதற்காக காயமடைந்தவருக்கு தண்ணீர் பருகக் கொடுத்தேன். பின்னர் துரைராசாவை செல்லையா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார். அன்று பிற்பகல் 3 மணியளவில் பொலிசார் என்னிடம் [illegible] முறைப்பாடு எடு[illegible]றனர்.

கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன், சார்ஜன்ட் பி. எஸ். அருளானந்தம், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பக்கீர் அகமட், பி. யாபசிங்கோ, ஏ. முருகுப்பிள்ளை, எஸ். வேலுப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர்.

நீதிபதி மேல்விசாரணையை [illegible]

# கைதடியில் சைவ மகாநாடு!

யாழ்ப்பாணம், சனி

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் 3-வது மகாநாடு இம்மாதம் 19, 20' 21ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

சைவவாலிபர் மகாநாடு, சைவமங்கையர் மகாநாடு, சைவ சாதனை மகாநாடு, சைவ இலக்கிய மகாநாடு ஆகிய மகாநாடுகள் கைதடி பூர்த்தியாவத்தைக் கந்தசுவாமி கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சைவத்தொண்டர் அரங்கில் நடைபெற இருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ. சுவாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் மகா நாட்டை ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்.

# அங்குரார்ப்பணம்

கோண்டாவில், வெள்ளி

இணுவில் ஸ்ரீ முருகன் பொதுநல முற்போக்குச் சங்கம் இணுவில்மக்களால்திரு. எஸ். மயில்வாகனம்தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. புது வருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் திரு, எஸ். மயில்வாகனம், தலைவர் திரு. வ. இராசதுரை, செயலாளர் திரு. மு. சிவபாதசுந்தரம், தனாதிகாரி திரு. மு. கனகலிங்கம் மற்றும் ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# சுருட்டுத் தொழிலாளருக்கு மீண்டும் வேலை

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் கனகலிங்கம் சுருட்டுத் தொழிற்சாலையில் வேலைநீக்கம் செய்யப்பட்ட 74 சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது, தொழில் கந்தோரில் நடந்த விசாரணையின்போது அவர்களுக்கு வேலைவழங்கும்படி தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவர்களுக்கு மீண்டும் வேலைவழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# இலவசவைத்தியசாலை இயங்க முடியாதநிலை

கனகராயன்குளம், வெள்ளி

''மேல்பற்றுவடக்(குஞ்சுக்குளம் சுட்டான்) கிராமசபையால்நடாத்தப்படும் இலவச வைத்தியசாலையைத் தொடர்ந்து நடத்தமுடியாத நிலைமை கிராமச்சபைக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலிருந்து மேற்படி கிராமச்சபைக்கு ஒதுக்கப்பட்ட இலவசவைத்தியசாலை நன்கொடைதடைபட்டதன் காரணமாக கிராமச்சபை வைத்தியசாலையைத் தொடர்ந்து நடாத்த முடியாதநிலைமை ஏற்பட்டுள்ளதாகஅறிவிக்கப்படுகிறது.

# தமிழ் இல்லை

மன்னார், வெள்ளி

தமிழ் மக்கள் அதிகமாக உள்ள செம்மந்தீவுக் கிராமத்தில் தபால் பெட்டியிலுள்ள ''தபாற்கந்தோர் தபாற்பெட்டி'' என்ற வாசகங்கள், தனிச் சிங்களத்திலும், முருங்கன் 11-ம் கட்டை கௌரி அம்மான் சந்தியில் ஆங்கிலத்திலும், எழுதப்பட்டுள்ளன, இவ்விரு பெட்டிகளிலும் தமிழ் எழுதப்படவில்லை.

கிளிநொச்சி பகுதி

# மக்களின் தேவைகள் பற்றி எம். பி.க்கு முறையீடு

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் துணுக்காய் காரியாதிகாரி திரு. இராசரத்தினம், துணுக்காய் கிராம சபைத் தலைவர் திரு. சோமசுந்தரம் ஆகியோருடன்துணுக்காய்ப் பகுதியில் பல இடங்களைப் பார்வையிட்டார்.

தென்னியன்குளம் குடியேற்றத்திட்டம் கல்விளான் பாடசாலை, புற்பாய் இழைக்கும் வீடுகள், ஐயன்குளம் உயர்மட்ட நீர்ப்பாசனத் திட்டப்பகுதிகள் முதலியனவற்றிற்கும் இவர்கள் சென்று மக்களின் குறைகளை நேரில் விசாரித்தனர்.

துணுக்காய் காரியாதிகாரி அலுவலகத்தில் கூட்டப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்களின் கூட்டத்திலும் திரு. இரத்தினம் பங்கு பற்றினார். பாலியாற்றிலுள்ள புற்களைக் கொண்டு கல்விளான் மக்கள் இழைக்கும் பாய்களின் தரத்தைப் பாராட்டிய திரு. இரத்தினம் கல்விளானிலும், மல்லாவியிலும் புற்பாய் இழைத்தலை எல்லா வீடும் குடிசைக்கைத்தொழிலாக்கிக்கொள்ளல்வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

வன்னேரிக்குளத்திலும்புல் கிடைப்பதால் அங்கும் இக்கைத்தொழிலைத் தொடங்குவதற்கு ஒழுங்கு செய்யுமாறும் அவர் கூறினார்.

மல்லாவியிலும், துணுக்காயிலும் மடபாண்டங்கள் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதெனவும் தெரிவிக்கப்பட்டது.

பனை நடுதலையும் ஊக்கமளிக்க வேண்டுமெனவும் 2000 பனைவிதைகளைத் துணுக்காய்க்கு அனுப்ப தாம் ஒழுங்குசெய்திருப்பதாகவும் திரு. இரத்தினம் தெரிவித்தார்.

துணுக்காய் பஸ் சேவை பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

# தமிழரசார். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலும் தமிழரின் உரிமை வழங்கப்படுவதற்குச் சிங்கள மக்கள் எதிராக நிற்கவில்லையெனக் கூறுவார்கள்.

இந்த அரசாங்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கக்கூடிய புதிய திட்டங்களையோ, கட்டுத்தாபனங்களையோ ஆரம்பிக்கவில்லை. மொழிப் பிரச்னை பற்றிப் பேசும்போது அவர் கூறியதாவது: தமிழரசுக்கட்சியினர் தமிழையும், ஆங்கிலத்தையும் ஆதரிக்கின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்படுவதை தமிழரசுக்கட்சியினர்எதிர்த்தால், நாங்களும் அதே வழியை இங்கு கையாளுவோம்.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் கூடைக்குள் [?]சக்கிப் போடப்பட்டுவிட்டது. இந்தியாவிற்கு செல்லவிரும்பும் இந்தியர்களை அனுப்புவதற்கு மட்டுமே தான் இடங்கொடுக்க முடியும் என திரு. தொண்டமான் கூறுகின்றார். திரு.தொண்டமானின் முடிவை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டுமானால், சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தினால் எவ்வித பயனுமில்லை.

பிரதமமந்திரி தேசிய ஒற்றுமைபற்றிப் பிரமாதமாகப் பேசிக்கொள்கிறார். ஆனால் மந்திரிசபையிலுள்ள ஒரு மந்திரி, தமிழருக்கு தனிப்பட்ட ஒரு அரசு நிறுவும் வரை இந்நாட்டில் தேசிய ஒற்றுமை நிலவாதெனக் கூறிவருகிறார். அப்படியானால் எப்படி நாம் தேசியஒற்றுமையை எதிர்பார்க்கமுடியும்.

வடக்கு, கிழக்கில், சிங்கள ஆசிரியரை எதிர்த்தால் தென்னிலங்கையில் தமிழ்ஆசிரியர்களை எதிர்க்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நாட்டிலும் நகரிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கேற்ப சுருங்கிக் கொண்டே போயிற்று. இறுதியில் பேச்சுக்கள் துப்புரவாக முறிவடைந்தபோது சிறந்த கம்பனத்தில் ஒருயார் கூட மிஞ்சவில்லை.

இதற்கு அடுத்தடுத்தநாள் தொடங்கிய வியட்நாம் யுத்தம் இன்னமும்தான் நின்றபாடில்லை.

பிரெஞ்சுக்காரர் ஹோசிமின்னை வேண்டாத விருந்தினர் என்று எவ்வளவு நாசுக்காகக் காட்டி விட்டார்கள், பார்த்தீர்களா?

சோவியத் யூனியன் கடந்த 19 மாதங்களாக வானவெளிக்கு மனிதரை அனுப்பவில்லை. இந்தத்தனைக்குள் அமெரிக்காவெகு மும்முரமாக வானவெளி வீரர்களை அனுப்பிவந்திருக்கிறது. 19 மாதங்களாக மௌனமாயிருக்கும் ரஷ்யா வெகு சமீபத்தில் அதிர்ச்சியூட்டத்தக்க ஒரு விண்வெளிசாதனையை மேற்கொள்ளக் கூடுமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

சர்வதேச விண்வெளி சம்மேளன காங்கிரஸ் இப்பொழுது ஸ்பெயின் தேசத் தலைநகரிய மாட்றிட்டில் நடக்கிறது. இதற்கு முன்பு இந்தக்காங்கிரஸ் கூட்டம் 1957ம்ஆண்டு நடந்தபோது தான் ரஷ்யாவின் முதலாவது 'ஸ்புட்னிக்' வானவெளியில் பறந்ததென்பது குறிப்பிடத்தக்கது. 18 மாதங்களுக்கு முன்பு இரண்டு செயற்கை உபகிரகங்கள் பூமிக்குமேல் 560 மைல் உயரத்தில் அண்டவெளியில் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன என்ற தகவல் இந்த மகாநாட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

--வழிப்போக்கன்

# இலக்கியத்தில். . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைப் பின்பற்றி இருந்ததைக் காண முடிகின்றது. சமுதாயத்தின் வாழ்வு அரசியல் தலைவர்களின் கையில் மட்டுமல்ல கலைஞர்களிலும் தங்கியுள்ளது. இலங்கையில் இன்று தோன்றியுள்ள அசிய சூழ்நிலைக்கு இந்நாட்டுக் கலைஞர்கள்தான் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். கலைஞர்கட்கு அரசியல் ஒருபோதும் கைகொடுக்க மாட்டாது. கலைஞன் யாவரையும் பாரபட்சமற்ற முறையில் நோக்கும் ஒரு தராசுகோல் போன்றவன், கவிதைகளை மதிக்க வேண்டும். பிறநாட்டுக் கலைஞர்களைப் போற்றிப்புகழ்ந்து அமோக வரவேற்புக் கொடுக்கும் நாம் எம்நாட்டுக் கலைஞர்களைக் கேலியாக நோக்குவது எம்மையே இழிவுபடுத்துவதாகும்.''

இக்கூட்டத்துக்கு திரு. வி. கே. நடராசா தலைமை வகித்தார். மற்றும் திருவாளர்கள் சுபர், பண்டிதர் க. வீரகத்தி ஆகியோரும் வேறுபலரும் கருத்துரை வழங்கினார்கள். செயலாளர் திரு. செ. யோகராசா நன்றியுரை கூறினார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'எமது கலைஞரை நாம் கௌரவிக்கவேண்டும்'

## முத்தமிழ் விழாவில் உடுப்பிட்டி எம். பி.

யாழ்ப்பாணம், சனி

"நமது கலைகளும் இலக்கியங்களும் பாரத நாட்டுடன் தொடர்பு உடையதாகவே வளர்ந்திருக்கின்றன பாரத நாட்டுக் கலாசாரத்தொடர்பிலுலே நம் கலைகள் எப்போதும் ஓங்கி உயர்வுற்றிருக்கின்றனவாயினும் நம்மிடையே தனித்த பண்பாடு வளர்ந்து வந்திருக்கிறது. கலைவிழாக்களுக்குத் தாய் நாட்டு அறிஞர்களை யாம் அழைத்துச் சிறப்புக்கொடுக்க வேண்டுமேயாயினும், எம்மிடையே வாழுகின்ற கலைஞர்கள், கவிஞர்களைப் பாராட்டி அவர்களை ஊக்குவிக்கின்ற எண்ணம் வளர வேண்டும். இதனால் நம் கலைகளும், இலக்கியங்களும் தனித்த பாரம்பரியத்தோடு நம் நாட்டின் சிறப்பைப் பிரதிபலிக்கக் கூடியனவாக ஆகமுடியும்."

இவ்வாறு சென்ற வியாழக்கிழமை இரவு திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் மன்றத்தின் நான்காவது முத்தமிழ்விழா இலக்கிய அரங்குக்குத் தலைமை தாங்கிய உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், "உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் தமிழ்மீது ஆராப்பற்றுடன் கலைவிழாக்களையும், முத்தமிழ் விழாக்களையும் நடாத்துகின்ற ஊக்கத்தையும் கொள்வதற்கு டிப் பாரதியின் கவிதைகளே காரணமாகியுள்ளன" என்ருர்.

'நாடக இலக்கியம்' பற்றிப் பேசிய திரு. [illegible] நாடகங்கள் படிப்பதற்காக ஆக்கப்படுவனவல்ல. அவை மேடையேற்றி, மக்களுடைய வாழ்க்கையை மேம்பாடடையச் செய்யக்கூடிய வெற்றியுடையதாக அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டு, ஈழத்து நாடகப் படைப்புகள் பற்றி விளக்கிக் கூறினர்.

கவிதை பற்றி பேசிய சொக்கன் இன்றுஇலங்கையில் யாக்கப்படும் கவிதைகள்பத்திரிகைகளின் தேவைகளுக்காக அவசரமாக அமைக்கப்படுகின்றன வென்று குறிப்பிட்டார்.

சிறுகதை பற்றிப்பேசிய செம்பியன் செல்வன் 1960-ம் ஆண்டிற்குப்பின் இலங்கையில் சிருஷ்டிக்கப்பட்ட சிறுகதைகளுள் 'நிறை நிலா' தமது கணிப்புப்படி சிறந்ததாகப்படுகிறதென்றும், நூல்களுக்குப்பரிசு வழங்கும்போது நூல் ஆசிரியர்களைப் பற்றிப்பார்க்காது தரத்தை கருத்தில் கொண்டு பரிசு வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

நாவல் இலக்கியம்பற்றிப் பேசிய யாழ்வாணன் ஈழத்து நாவல் இலக்கியம் ஏனைய இலக்கியங்கள் வளர்ந்திருக்கின்ற அளவுக்குவளரவில்லையென்றும், சமீபத்தில் வெளியான ஒரு சில நாவல்கள் நம்மவர் இத்துறையில்வளர்வதற்குரிய நிலையை அடைந்திருக்கிருர்கள் என்பதைக்குறிப்பிடுகின்றன என்றும் தெரிவித்தார். திரு. க. கணேசலிங்கம் பாரதியின் சிரிய கவிதைகள் தமிழுணர்ச்சியைத்தட்டியெழுப்பி எமது சமுதாயத்தை உயர்த்தியுள்ளது என்றும், வீர உள்ளத்தையும், விடுதலை வேட்கையையும் ஊட்டும்' அவரதுகவித்துவ சக்தியே இன்றைய உலகில் இளைஞர்களின் உள்ளங்களைச் செம்மைப் படுத்துகின்றன என்றும் கூறினர்.

## பொன்வயல்

இடமின்மையால் இன்று 'பொன்வயல்' பகுதி வெளிவரவில்லை.

## மோசடிவழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

பொய்யான இறப்பு பத்திரத்தைக்கொடுத்து, யாழ் நகர் கஷ்டநிவாரண பாதுகாப்பு சங்கத்தைஏமாற்றியதாகவும், அதன்மூலம் 500 ரூபா பணமோசடி செய்ததாகவும், மருதடிவீதியைச் சேர்ந்த சண்முகம் என்பவர் மீதுகுற்றஞ்சாட்டி தொடரப்பட்ட இரு வழக்குகள் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. சி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.


எதிரிசார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர். வழக்காளிதரப்பில் புறக்டர் ஏ. அன்ரனி, பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானுர். மாஜிஸ்திரேட் முதலாவது வழக்கை, அடுத்தமாதம் 12-ம் தேதிக்கும் இரண்டாவது வழக்கை அடுத்தமாதம் 23ம் திகதிக்கும் ஒத்திவைத்தார்.


ராஜே

"யூற்றிலிட்டி"

ஸ்பிரிங் பிரேம்

இப்பொழுது கிடைக்கும்



தொடர்பு கொள்ளுங்கள்

த பர்மா ரீக் ட்ரேடிங்கம்பனிலிமிட்.

62, புளுமெண்டால் ரோட், கொழும்பு-13.

போன்: 2333, 2234

தந்தி: Teaklog



பூஜைக்கு - அபிஷேகத்துக்கு

தேவையான

பொருட்கள்

கிடைக்குமிடம்

சுந்தரம் பிரதர்ஸ்

(மருந்துச்சரக்கு வியாபாரம்)

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.





உங்கள் பயிர்களைப்

பாதிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி

விளைச்சலைப்பெருக்கிக் கொள்ளுங்கள்.



வதை பாதுகாப்பு செரசான்

நெற்பயிரை பாதிப்பதற்கு அனுசரணையாக விருக்கும் நெல் தீய்ந்து போதல், பழப்புழுதல், வேர் அழுகுதல் போன்ற பூஞ்சண வியாதிகள் விதைகளையும், விதை முளைகளையும், பாதிக்காமல் இருப்பதற்கான நிவாரணம். நடுவதற்கு முன்பு விதைகளுக்குப் பூசலாம்.



சேர்கோப்பூர் (3.4-டி: பி.ஏ)

நெற்பயிருக்குபோடப்படும் உரத்தை கிரகித்து நெற்பயிருடன் போட்டியிட்டு விளைச்சலை பாதிக்கும் புல்களையும் களைகளையும், அழித்து விடுகிறது. சேர்கோப்பூர், ஒரு களை நாசினி. நெற் கதிர்களுடன் வளரும் எல்லாவித களைகளையும் கட்டுப்படுத்த சிறந்தது சேர்கோப்பூர், தெளிக்கும் கருவி மூலம் (Sprayer)சேர்கோப்பூர் தெளிக்கும் பொழுது அது வெளிபாகவழில் தடைபடாது.



ஹெடோனல் எம். (எம்.சி.பி.ஏ) & ஹெடோனல் "டி" [2.4 டி]

இது ஒரு சிறந்த களை கொல்லி. முக்கியமாக நெற்கிருஷியில் அகலமான இலைகளையுள்ள களைகளை வெகு வல்லமையுடன் அழிக்க வல்லது. ஹெடோனல் களைகளை அழித்து அதிக நேரத்தில் உங்கள் விளைச்சல்களை பாதுகாக்கிறது.



பொலித்தியோன்

நெற்கிருஷியை பாதிக்கும் பூச்சி புழுக்களை முக்கியமாக மாய்க்கும் கம்பளிப்பூச்சிகள், முனைத்தண்டை துளைத்து உறிஞ்சும் பூச்சிகள் இலைகளை சுழற்றும் பூச்சிகள் போன்றவைகளை அழிக்கும் சக்திவாய்ந்தது



டிபடெரெக்ஸ் எஸ். பி. 80

நெற்கிருஷியை பாதிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த டிபடெரெக்ஸ் எஸ். பி. 80 மிகச் சிறந்தது. மறைந்திருந்து சேதம் விளைவிக்கும் மூட்டைப் பூச்சிகளையும் இலை சுழற்றிகளையும் இலைகளை வெட்டும் பூச்சிகளையும் தண்டை துளைக்கும் பூச்சிகளையும் இலகுவில் அழித்துக் கட்டும் நாசினி.



லெபேசிட் ஈ. சி. 50

நெற்பயிர்களின் தண்டுகளை துளையிடும் பூச்சிகளினால் ஏற்படும் பெரும் அபாயங்களை ஒழித்துக்கட்ட கமக்காரர்கள் காத்திருக்க வேண்டியதில்லை. லெபேசிட் ஈ. சி. நெடுகால சக்திவாய்ந்த பனிப்பூச்சி, தத்து வெட்டி ஆகியவற்றை அழிக்கும்.



டிப்டரெக்ஸ் தூள்

நெற்கிருஷியை பாதிப்பதற்கு மிகப் பெரிய காரணமாய் இருப்பது நெல் ஈ டிப்டரெக்ஸ் தூளை தூவிவிடுவதால் இதனை சம்பூரணமாக கட்டுப்படுத்தலாம். இது நெற்கிருஷியை பாதிக்கும் மூட்டைப் பூச்சிகளை ஒழித்து விடுகிறது.



எமது விவசாய இரசாயன பகுதி நவீன முறைகளில் விவசாய இரசாயனப் பொருள் உபயோக முறைகளை செயல் முறைகளில் விரும்பும் கமக்காரர்களுக்கும் விவசாயிகளுக்கும் போதனைகளுடன் செய்து காட்டி உதவி புரிய எப்பொழுதும் தயாராக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

றேயல் டிஸ்பென்சரி,

270, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

விவசாய இரசாயனப் பொருளாளர்,

ஹேலீஸ் லிமிட்டட்

(விவசாய இரசாயன பகுதி)

தபால் பெட்டி 70, 400, டீன்ஸ் ரோட் கொழும்பு-10.

தொலை பேசி: 9206.

Vision-HL-105


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பாடசாலைகள்

# வலைப்பந்தாட்டப் போட்டிகள்

## சாம்பியன் தெரிவு 25-ல் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மகளிர் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் ஒழுங்கு செய்யப்பட்ட மகளிர் பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டி வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இச்சுற்றுப் போட்டி மேற்பிரிவுப் போட்டி கீழ்ப்பிரிவுப்போட்டி என இருபிரிவாக நடைபெறுகிறது வடமாகாணத்தைச் சேர்ந்த கோப்பாய் கிறிஸ்தவ மகளிர் கல்லூரி யாழ். கன்னியாஸ்திரிகள்மடம், கொக்குவில் இந்து மகளிர் கல்லூரி, மகாலயர் மகாவித்தியாலயம் சாவகச்சேரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, வடஇந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகள் பங்கு கொள்கின்றன. இதுவரை நடைபெற்ற காரசாரமான போட்டிகளில் வெற்றிபெற்ற கல்லூரிகளின் விபரங்கள் வருமாறு:

### மேற்பிரிவுப் போட்டி

யாழ். கன்னியாஸ்திரிகள் மடம், சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், உடுவில் மகளிர் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி.

### கீழ்ப்பிரிவுப் போட்டி முடிவுகள்

யாழ். கன்னியாஸ்திரிகள் மடம், யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகாவித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி.

### சாம்பியன் போட்டிகள்

இச்சுற்றுப் போட்டியின் சாம்பியனுக்கான இறுதிப் போட்டிகள் யாழ். விளையாட்டரங்கில் 25-ந் திகதி நடைபெறும். ஏனையபோட்டிகள் யாழ். கன்னியாஸ்திரிகள் மடத்திலும், சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும், 18-ல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், 20-ல் யாழ். கன்னியாஸ்திரிகள் மடத்திலும் நடைபெற இருக்கின்றன.

# எம். பி.யின் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

அறுவடை செய்யும் பொழுது மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட நெல்லை சங்கங்கள் கொள்வனவு செய்யவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ இரத்தினம் சமத் தொழில் ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

# வாலிபரின் பரிதாப மரணம்

காங்கேசன்துறை, வெள்ளி

மயிலிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் இராஜலிங்கம் என்ற வாலிபருக்கு இரவு நேரத்தில் காலில் ஏதோ கடித்ததனால் சிலமணி நேரத்தின் பின் அவர் மரணமானார்.

# சத்தியாக்கிரகம் பற்றி சமரக்கொடி

சுழிபுரம், சனி

''சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு புரட்சிவாத சமசமாஜக்கட்சியின் நிபந்தனையற்ற ஆதரவு உண்டு.''

புரட்சிவாத சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. எட்மண்ட் சமரக்கொடி, சிறுபான்மைத் தமிழர் பிரச்சனையில் தமது கட்சியின் நிலையை வெளியிடும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்


அவர் மேலும் கூறியதாவது:

''சாதி அடிப்படையில் நடக்கும் அடக்குமுறை உட்படச் சகலவகையான அடக்குமுறைகளையும் சமசமாஜ இயக்கம் தனது ஆரம்பகாலம் தொடக்கம் எதிர்த்து வந்துள்ளது. புரட்சிவாத சமசமாஜக் கட்சியின் நிலையில் எவ்வித மாற்றமும் இல்லை. முன்புபோலச் சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான சகல இயக்கங்களுக்கும் நாம் ஆதரவளிப்போம்.

எத்தனையோ சமூக மாற்றங்கள் நடைபெற்றபின்னரும் சாதி அடக்குமுறை இலங்கையின்பலபகுதிகளில் நிலவுவது துரதிருஷ்டமாகும். குறிப்பாக இந்தச் சாதியடக்குமுறை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படுவது விசனிக்கத்தக்கதாகும்.''



50 சதத்துடன் விரைவில் செல்வந்தராகுங்கள்

ஒவ்வொரு வாரமும், நூற்றுக்கு மேற்பட்டவர்கள் விரைவில் செல்வந்தராகி விடுகின்றனர்.



அடுத்து உங்கள் முறை ஆகலாம்

50 சதத்திற்கு நீங்கள் புத்தம் புதிய கார் ஒன்றையும் பெருந் தொகைக்கான காசோலையையும் பெறலாம்.





அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து இராதீர்!

உங்கள் தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டுகளை இன்றே வாங்குங்கள்.


உங்கள் அடுத்த பெரிய சீட்டிழுப்பு:

1966 ஒக்டோபர் 20ந் திகதி மாத்தளையில் நடைபெறும்.


1வது பரிசு ரூ.100,000/- அல்லது மேர்சிடெஸ் பென்ஸ்190, 4 ஸ்ரீ 8764 வும் ரூபா 50,000/-* ரொக்கமும்.




2வது பரிசு ரூ. 40,000/- அல்லது புத்தம் புதிய மொரிஸ் 1000மும் ரூபா 24,750/-* ரொக்கமும்



3வது பரிசு ரூபா 10,000/ அல்லது புத்தம் புதிய பியற் 600ம் ரூ. 1,500/- ரொக்கமும்



இந்த சீட்டிழுப்பில் 100 ஆறுதல் பரிசுகள் பெறுபவர்கட்கும் அவர்கள் விரும்பினால் தங்கள் பரிசுத் தொகையிலிருந்து மூன்று லாச்சியுள்ள உள்ளுக்கு மடித்துவிடக் கூடிய மொடல் ''பிரொதர்'' தையல் மெஷீன் ஒன்றை விசேஷமாக குறைக்கப் பட்ட விலைக்குவாங்க சந்தர்ப்பம்அளிக்கப்படுகிறது.



கடந்த இரண்டு கார் சுவீப் சீட்டிழுப்பில் 100 அதிர்ஷ்டசாலிகள் தலா ரூபா 1,415/80ஐ பரிசாகப் பெற்றார்கள்.

இந்த கார்களையும் தையல் மெஷின்களையும் வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப் பின்னர் 14 நாள்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஞாபகத்திலிருக்கட்டும்:-

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட்டும் அதிர்ஷ்டத்தின் வாயிலுக்கு உங்களை அழைத்துச் செல்கிறது.

50 சதம் முதலீடு செய்து பெரும் செல்வம் தேடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழவி கொட்டி பெண் மரணம்

யாழ்ப்பாணம், சனி

குளவிகள் கொட்டி ஒரு பெண் மரணமானார். இச் சம்பவம் காரைநகரில் நடந்துள்ளது.

காரைநகரைச் சேர்ந்த பொன்னையா சின்னப்பிள்ளை (26 வயது) யின் மரண விசாரணையின்போது இவ் விபரம் தெரியவந்தது. யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

நேற்று நண்பகல் 1 மணிக்கு வீதியினால் நடந்துசென்றபொழுது, பனை ஓலைக்குள்ளிருந்த குளவிக் கூட்டை காலஞ்சென்றவர் மிதித்ததாகவும், குளவிகள் அவரை கொட்டியதாகவும், அவரது மகன் செல்லத்துரை, அவரை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்ததாகவும், இன்று அதிகாலை அவர் மரணமானாரென்றும், விசாரணையின் போது கூறப்பட்டது.

டாக்டர் எஸ். நல்லைவிஞயகம் சாட்சியமளித்தபோது குளவிகள் கடித்த விஷத்தினால் மரணம் சம்பவித்ததென்றார். விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.

## நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, வெள்ளி

உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திருச்செல்வம் மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை அடுத்தமாதம் 8, 9-ம் திகதிகளில் விவாதிக்கப்படுமென்று தெரிகின்றது

பிரதம மந்திரி வெளிநாடு சென்றபோது விமான நிலையத்துக்கு பிரதம நீதியரசர் சென்றது குறித்து எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் பிரேரணையும் விவாதத்துக்கு வரவிருக்கின்றது.

இன்று நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இவைபற்றி முடிவுசெய்யப்பட்டன. உபசபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதிக்கும் திகதி பிறகு அறிவிக்கப்படும்.

# தொடம்பே முதலாளி மரண விசாரணை

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளியின் மரணம் சம்பந்தமாக பொலிஸ் இலாகாவின் விசேஷப் பிரிவினர் நடத்தியுள்ள புலன் விசாரணைகளில் அந்தமரணம் கைமோசக் கொலை என்பதற்கு சரியான ஆதாரம் கிடைக்கவில்லையென்று கருதப்படுகின்றது.

தொடம்பே முதலாளி என்பவர் சதிமுயற்சி விசாரணைகளின்போது பொலிஸ் தலைமைக்காரியாலய கட்டிடத்திலிருந்து விழுந்துமாண்டார். இவர் மரணம் முதலில் தற்கொலையென்றும் பின்னர் கைமோசக்கொலையென்றும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாக நடைபெற்ற மரண விசாரணைகளின்போது முக்கிய சாட்சியாக இருந்த சார்ஜண்ட் ஹொந்தமுனி இன்னும் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுக்கவில்லையென்றும் இவர் வாக்குமூலம் கொடுக்காத பட்சத்தில் கைமோசக் கொலையென்பதற்கு போதிய ஆதாரம் கிடைக்காமல் போகும் என்றும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலிசார் நடத்தியுள்ள விசாரணைகளின் முடிவுகள் விரைவில் கோட்டை நீதவான் முன் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுக்கிணற்றில்

# பெட்ரோல் ஊற்றிய வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்!

பருத்தித்துறை, வெள்ளி

பொதுக்கிணற்றில் பெற்ரோல் ஊற்றிப் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த முயன்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை மாதம் 17ந் தேதி பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த தேவசகாயம், சின்னராசா ஆகியோர் சின்னத்துரைக்குச் சொந்தமான பொதுக் கிணற்றில் பெற்றோல் ஊற்றி இடைஞ்சல் ஏற்படுத்த முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தில் உள்ளேயும், வெளியேயும் பலர் திரண்டிருந்தனர்.

எதிரிகள் சார்பில புறக்டர் வி. சி. சுந்தரலிங்கம் ஆஜரானார். பருத்துத்துறை பொலிஸார் வழக்கை நடத்தினர்.

விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

## வற்றாத கிணறு

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமானாறு இந்து ஆங்கில பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் பொந்துக்கிணறு என்றழைக்கப்படும் கிணற்றை நீர்ப்பாசனப் பகுதியினர் தொடர்ந்து மூன்று நாட்களாக நாலு நீர் இறைக்கும் இயந்திரம் வைத்து இறைத்தும் சிறிதளவேனும் வற்றாது இருந்து வருவதினால் நீர்ப்பாசனப்பகுதியினர் இதனைத்திருத்தி தொண்டமானாறு கரையோர மக்களுக்கு குடிநீராக உபயோகத்திற்கு கொண்டுவர ஆலோசித்து வருகிறார்கள்.

## மரண அறிவித்தல்

### சேதுகாவலர்

கைதடி இளைப்பாறிய ஆசிரியர் சேதுகாவலர் காலமாகிவிட்டார். இவர் பதுளை கூட்டுறவுச் சமாசத்தைச் சேர்ந்த புஸ்ராஜரத்தினம், பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சிருப்பர் விஜயரத்தினம், அருள்நாயகம், தலைமையாசிரியை, திருமதி மகாலிங்கம், ஆசிரியை திருமதி வேலாயுதர், ஆகியோரின் தந்தையும்; சரஸ்வதி, புவனேஸ்வரி, தலைமை ஆசிரியர் மகாலிங்கம், ஆசிரியர் வேலாயுதர் ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப. 2 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக கைதடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 1420

## கைகலப்புமுற்றி கத்திக்குத்து

உடுப்பிட்டி, வெள்ளி

இரு நபர்களிடையே தோன்றிய வாக்குவாதம் கைகலப்பாக மாறியதைத் தொடர்ந்து ஒருவர் கத்திக் குத்துக்குள்ளான சம்பவம் கரணவாய்தெற்கு 'ஒசட்டி' என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது. சின்னப்பு இரத்தினம் என்பவர் பலுவில் கத்தியால் வெட்டப்பட்டு அபாயகரமான நிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சந்தேக நபரான நாகன் மாணிக்கம் என்பவர் தலைமறைவாகியுள்ளதாகத்தெரியவருகிறது. பருத்தித்துறைப் பொலிஸார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

## யாருடையது?

மானிப்பாய் நடராஜா ஸ்டோர்ஸுக்கு முன்பாக திரு. என். செல்லத்துரை என்பவர் இரண்டு அரிசிக் கூப்பன் புத்தகங்கள் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

## புத்தகக் கண்காட்சி

உடுப்பிட்டி, வியாழன்

நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு நெல்லியடி பட்டினசபையின் விஷேச ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் கலைமகளின் பெருமையை விளக்கும் வகையில் அமைந்த புத்தகக் கண்காட்சியொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளார். இம்மாதம் 21-22 ஆகிய திகதிகளில் இருதினங்கள் நடாத்தப்படவிருக்கும் இப் "புத்தகக் கண்காட்சி" நெல்லியடிப் பட்டினசபை மத்தியநூல் நிலையத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரூ. 1 லட்சம் செலவில் புதிய இராஜகோபுரம்

வல்வெட்டித்துறை, வெள்.

வல்லை வைத்தீஸ்வரன் ஆலயத்துக்கு இடப்பக்கத்திலே கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் ஜனவரி மாதம் 26-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இவ்வாலயத்தின் பழைய இராஜகோபுரம் இடிக்கப்பட்டு புதிய கோபுரம் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவில் கட்டிமுடியுங் கட்டத்தை அடைந்துள்ளது. தென்னிந்திய சிற்பாசாரிகளால் அழகுற அமைக்கப்பட்டுவரும் இக்கோபுரம் இலங்கையில் முதன்மை பெற்றதாயிருக்குமென்று கூறப்படுகின்றது.

## கடற்றொழிலாளர் மந்திரியை சந்திப்பர்

யாழ்ப்பாணம், சனி

தொடர்ந்துநடைபெற்றுக்கொண்டிருக்கும்சிறகுவலைத் திருட்டைத் தடுக்கஇதற்கு ஒரு நிரந்தர தீர்வுகாண்பதற்காக வடமராட்சி சிறகுவலைத் தொழிலாளர் சங்க சமாஜ பிரதிநிதிகள் கடற்றொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவை இம் மாதம் 18ம் திகதி பேட்டிகாணவிருக்கின்றனர்.

இவர்கள் இது சம்பந்தமாக பலமுக்கியபிரச்னைகளை மந்திரியிடம் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

## இவர்களுக்குப் பட்டம்

திருநெல்வேலி, வெள்ளி

திருநெல்வேலி கிழக்கு இந்து இளைஞர் இயக்கத்தாரால் இம்மாதம் 12-ம்13-ம் திகதிகளில் கொண்டாடப்பட்ட நான்காவது முத்தமிழ் விழாவில் திரு. ஜே. எஸ். அழகையா தலைமையில் பின்வருவோர் பட்டம் வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கை வானொலிப் புகழ் நாதசுர மேதை திரு. பி. எஸ். பிச்சையப்பாவுக்கு 'நாதஸ்வர கலாஜோதி' என்ற பட்டமும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் பிரதம சிஷ்யராகிய தமிழ்மணி திரு. எஸ். கனகசுந்தரத்துக்கு 'வில்லிசைக் கலாநிதி' என்ற பட்டமும், மெல்லிசை விற்பன்னர்களாகிய இரட்டையர்களுக்கு [illegible] பட்டமும் வழங்கப்பட்டது.

# இந்திய பத்திரிகை குழுவினருக்கு வரவேற்பு

கொழும்பு, சனி

நேற்றுக் கொழும்பு வந்துசேர்ந்த இந்தியப் பத்திரிகையாளர்களுடன் ஹிந்துப் பத்திரிகையின் புதுடில்லி அலுவலகத் தலைவர் கே. ரெங்கநாதனும் வந்திருக்கிறார். இவர் இந்தியாவில் பிரபல்யமான பத்திரிகையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல் பகுதி அதிபரால் அளிக்கப்பட்ட மதிய போசனத்தின் போது திரு. ரெங்கநாதன் பேசுகையில், ஒரு நாட்டை அதன் பிரச்னைகளை வைத்துக்கொண்டு எடைபோடக்கூடாது. அந்நாட்டின் நிலையை நேசமனிதாபிமானத்துடன் பார்க்கவேண்டுமென்றார்.

இந்திய தூதரகத் தகவல் அதிகாரி திரு. திருபாத்தியின் இல்லத்தில் இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பத்திரிகை ஸ்தாபனப் பிரதிநிதிகளும், ராஜதந்திரிகளும் உயர்தர அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## பதவியிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மை பலம் கிடைக்காமல் போனதுதான் காரணம் என்று அவர் கூறினார்.

ஐக்கியதேசியக்கட்சி பெரும்பான்மை கட்சிகளின் ஆதரவைபெற்றதும் தாம் பதவியை ராஜினாமா செய்ததாகவும், தமிழரசுக் கட்சியுடன் தாம் பேச்சுவார்த்தை நடாத்தவில்லையென்றும். கூட்டாட்சி உறுப்பினர்கள் சிலர்தான் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள் என்றும் கூறினார். தமிழரசுக்கட்சியினரும் தம்முடன் பேசவரவில்லையென்றும் அவர் கூறினார்.

## இணுவில் ஆஸ்பத்திரி வேலை நிறுத்தம்

கோண்டாவில், வெள்ளி

இணுவில் மக்கிலியட்ஆஸ்பத்திரி வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்று காலை வட இலங்கை பிரத்தியேக ஆஸ்பத்திரி ஊழியர்சங்கத் தலைவர் திரு. சாமுவேலுக்கு வேலை நீக்க நோட்டீஸ் ஆஸ்பத்திரி சுப்பிரிண்டனல் வழங்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஆஸ்பத்திரி தாதிமார்களின் பெற்றார்களுக்கும், பாதுகாவலர்களுக்கும் சுப்பிரிண்டனால் அனுப்பப்பட்ட தந்தியொன்றில், சம்பந்தப்பட்டவர் "வேலையிலிருந்து நீங்கிக் கொண்டார். கூட்டிச் செல்லவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்டம்

## இன்றைய மோதல்!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டரசிகர்களுக்கு இன்று அருமையான ஒரு 'மோதல்' விருந்து! யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ்—சென். பற்றிக்ஸ் இருபிரிவு உதைபந்தாட்டக்காரர்களும் இன்று மாலை சென்ஜோன்ஸ் விளையாட்டரங்கில் மோதிக் கொள்கின்றனர்.

## காலமானார்

கொழும்பு, வெள்ளி

முன்னாள் இலங்கைப் பல்கலைக் கழக பேராசிரியர் திரு. எல். ஏ. கருணாரத்ன (வயது 78) இன்று கொழும்பில் காலமானார்.

## 3 பல்கலைக் கழகங்களுக்கு ஒரு பரிபாலன சபை

கொழும்பு, வெள்ளி

உயர்கல்வி தேசிய சபை நாட்டிலுள்ள மூன்று பல்கலைக்கழகங்களுக்குமான ஒரு பரிபாலன சபையை நிறுவவிருக்கின்றது. இந்த சபையில் 33 கல்வி அறிஞர்கள் இடம் பெறுவார்கள் என்றும் தெரிகிறது.

பல்கலைக்கழகங்களில் ஒவ்வொன்றுக்கும் 11 அங்கத்தவர்கள் இடம்பெறுவார்கள்.

## சினிமாவால் மண்டை உடைபட்டனர்

உடுப்பிட்டி, வெள்ளி

இரு ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கிடையில் சினிமா நடிகர்கள் சம்பந்தமாக ஏற்பட்ட சர்ச்சை ஒருவர் மற்றவரைத்தாக்கி மண்டை உடைபடக் காரணமாகவிருந்ததாக அறியப்படுகிறது. கரவெட்டியிலுள்ள பாடசாலையொன்றில் இச்சம்பவம் நடைபெற்றதாகத்தெரிகிறது.

இவ்வித கேவலமான செய்கைகள் மாணவர்களிடையே தோன்றியுள்ளது மிகவும் வருந்தத்தக்கது என ஆசிரியர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.


வரிவிளம்பரம்

விற்பனைக்கு

கார்

EL 5502 கொன்சல் கார் விற்பனைக்கு உண்டு. சகலவையும் திருத்தியமைக்கப்பட்டவை. விபரங்கட்கு: க.வையாபுரி, மயிலிட்டி கரை, மயிலிட்டி. 1421


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு [illegible] மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org